அம்மா கடல்தாயே அழகே கடல் அம்மா
படகினில் ஏறிவரும் அண்ணாவை காப்பாற்று
வலைகள் சுமந்தபடி மீன் அள்ள வருகிறா
நேவிகளின் கண்படாமல் நீ நின்று காப்பாற்று
தாய் தந்தை யாரும் இல்லை தவிக்கிறேன் சின்னப்பிள்ளை
எல்லாமே அண்ணா என்று எண்ணி எண்ணி வாழும் முல்லை

அம்மா கடல்தாயே அழகே கடல் அம்மா
படகினில் ஏறிவரும் அண்ணாவை காப்பாற்று
வலைகள் சுமந்தபடி மீன் அள்ள வருகிறா

வீசி வரும் காற்றினிலும் முக்கிங்கே கலந்துூறிப்போகும்
ஈழக்கடலாடும் மீனவர்கள் கதை கூட ஈரம் வாழ்வுக்காய் எதிர் நீச்சல் போடுகின்ற போதும்
இனிய பாசத்தின் ஒளி தேடும் விழி இங்கே பாரும்

வட்ட நிலா வந்தநேரம் படகினிலே சென்றாரே
பட்டு சட்டை தாறன் என்று பக்குவமாய் சொன்னாரே 2
ஆசை யேதும்  எனக்கில்லை அண்ணா தான் வரவேண்டும்
ஆபத்துக்கள் இல்லாமல் காப்பாத்து கடல்தாயே
கடல்தாயே கடல்தாயே கடல்தாயே காப்பாத்து

அம்மா கடல்தாயே அழகே கடல் அம்மா
படகினில் ஏறிவரும் அண்ணாவை காப்பாற்று
வலைகள் சுமந்தபடி மீன் அள்ள வருகிறா

குழைத்திலிருந்த பளம்சோற்றில் அன்பு மூச்சு தருவாரே
என்னில் கொள்ள பாசமுடன் பள்ளிவரை வரவாரே 2
நான் நன்றாய்  வளர்ந்திடவே  தன்னை வருத்திக்கொள்வாரே
துன்பம் ஏதும் தொடராமல் காப்பாத்து கடல்தாயே
கடல்தாயே கடல்தாயே கடல்தாயே காப்பாத்து

அம்மா கடல்தாயே அழகே கடல் அம்மா
படகினில் ஏறிவரும் அண்ணாவை காப்பாற்று
வலைகள் சுமந்தபடி மீன் அள்ள வருகிறா
நேவிகளின் கண்படாமல் நீ நின்று காப்பாற்று
தாய் தந்தை யாரும் இல்லை தவிக்கிறேன் சின்னப்பிள்ளை
எல்லாமே அண்ணா என்று எண்ணி எண்ணி வாழும் முல்லை
அம்மா கடல்தாயே அழகே கடல் அம்மா
படகினில் ஏறிவரும் அண்ணாவை காப்பாற்று
வலைகள் சுமந்தபடி மீன் அள்ள வருகிறா
கடல்தாயே கடல்தாயே கடல்தாயே காப்பாத்து 2